# எதை நினைவில் வைத்துக்கொள்ள விரும்புகிறோம்?

## என் குழந்தை நன்றாகக் கற்று முன்னேற நான் எவ்வாறு உதவி செய்துகொண்டிருக்கிறேன்?

## என்னுடைய குழந்தை வளர்வதற்கான வலிமை மற்றும் வாய்ப்புகள் எவை ?

# விவரிப்பான்(Descriptor) கூற்றுக்களை தேர்ந்தெடுப்பதற்கான டெசிஷன் டிரீ (நுழைவு)

**டெசிஷன் டிரீ என்றால் என்ன?**

டெசிஷன் டிரீ என்பது பின்வரும் மூன்று வகைப் பிரிவுகளில் உங்கள் குழந்தை எவ்வாறு செயல்படுகிறது என்பதை விளக்க உதவும் கூற்றுக்களைத் தேர்ந்தெடுக்க உதவும் ஒரு கருவியாகும். இதை IFSP குழுவினர் பயன்படுத்தி உங்களுக்கு உதவுவார்கள்:

1. நேர்மறையான சமூக உறவுகள்
2. புதிய திறன்களைக் கற்று அவற்றைப் பயன்படுத்துதல்
3. அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கையை எடுத்தல்

**இக்கருவியைப் பயன்படுத்தும் போது நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியவை**

வெவ்வேறு இடங்களில் மற்றும் வெவ்வேறு நபர்களுடன் அன்றாட நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கான செயல்பாட்டுத் திறன்களை எவ்வாறு குழந்தைப் பயன்படுத்துகிறது என்பதை சிந்திக்கவும். குழுவினர் தேர்ந்தெடுக்கும் கூற்று, கீழுள்ளவைகளின் அடிப்படையில் குழந்தையின் நடவடிக்கை எவ்வாறு உள்ளது என்பதைப் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும்:

- ஒரு குறிப்பிட்ட அமைப்பில் உங்கள் குழந்தையின் எதிர்பார்ப்புகள். வீட்டில் உங்கள் குழந்தை அதன் வயதிற்குரிய எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் அளவிற்கு செயல்படுகிறதா என்பதை தீர்மானிக்க, உங்கள் வீட்டுக் கலாச்சாரத்தின் எதிர்பார்ப்புகளைப் பயன்படுத்தவும்.
- உதவித்தொழில்நுட்பங்களை / சாதனங்களை பயன்படுத்துதல் (காது கேட்கும் கருவி, மூக்குக் கண்ணாடி, நடமாட உதவும் கருவிகள், ஆகியவை) அவர்கள் பயன்படுத்தும் விதம் அது பொதுவாக கிடைக்கும் போது. பல்வேறு அமைப்புகளில் அவர்களின் உண்மையான செயல்பாடு, அத்தொழில் நுட்பத்தை அவன்/அவள் வைத்திருந்து, முக்கிய தருணங்களில் செயல்படாமல் இருத்தல்.
- காலவரிசையின் படி உங்கள் குழந்தையின் வயது, அவர்கள் உரிய காலத்திற்கு முன்னரே பிறந்திருந்தாலும்

**முதல் கேள்வியுடன் துவங்குவோம் : இந்த அறிய உதவும் பிரிவில், குழந்தை அதன் வயதிற்குரிய எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் வகையில் செயல்பாட்டு திறன்களை எப்பொழுதேனும் பயன்படுத்துகிறதா?**

**ஆம்** | **இல்லை**

## முதல் கேள்விக்கு “இல்லை” என்று நீங்கள் பதில் அளித்திருந்தால்...

இந்தப் பிரிவில், ____________ இதைச் செய்வதற்கு **செயல்பாட்டு திறன்கள்** அதாவது ஒரு **மிகவும் குறைந்த வயது** குழந்தை அல்லது **ஓரளவு குறைந்த வயது** குழந்தையைப் போல **பெரும்பாலான இடங்களில் அல்லது சூழ்நிலைகளில் பயன்படுத்துகிறாரா?**

### மிகவும் இளைய குழந்தை

அன்றாட வாழ்க்கை செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளில், இந்த அறிய உதவும் பிரிவில் , மிகவும் குறைந்த வயதுடைய குழந்தைகளிடம் காணப்படும் முக்கிய திறன்களையே உங்கள் குழந்தைப் பயன்படுத்துகிறது.

### சற்று இளைய குழந்தை

எந்த அளவிற்கு, சிறிய வயதுடைய குழந்தையின் திறன்களைப் பயன்படுத்துகிறது?

அன்றாட வாழ்க்கை செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளில், இந்த அறிய உதவும் பிரிவில் , குறைந்த வயதுடைய குழந்தைகளிடம் காணப்படும் முக்கிய திறன்களையே பெரும்பாலும் உங்கள் குழந்தை பயன்படுத்திக் கொண்டுள்ளது.

அன்றாட வாழ்க்கை செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளில், இந்த அறிய உதவும் பிரிவில், வயதிற்கு ஏற்ற நடவடிக்கைக்கு முந்தைய அளவிற்கான திறன்களையே உங்கள் குழந்தை பயன்படுத்துகிறது. இந்த திறன்கள் அனைத்தும் குறைந்த வயதுடைய ஒரு குழந்தை செய்வதைப் போன்று உள்ளது.

## முதல் கேள்விக்கு “ஆம் ” என்று பதில் அளித்திருந்தால்...

இந்தப் பிரிவில் ____________ பயன்படுத்தும் **வயதுக்கேற்ற செயல்பாட்டு திறன்களை பெரும்பாலும் அனைத்து இடங்களிலும் சூழ்நிலைகளிலும் பயன்படுத்துகிறாரா?**

### இல்லை

எந்த அளவிற்கு *அவர்கள்* அனைத்து இடங்களிலும் சூழ்நிலைகளிலும் வயதுக்கேற்ற திறன்களைப் பெரும்பாலும் பயன்படுத்துகிறார்கள்?

அன்றாட நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகளில், இந்த அறிய உதவும் பிரிவு நடவடிக்கைகளைப் பொருத்த வரையில், உங்கள் குழந்தை பயன்படுத்தும் திறன்கள் பெரும்பாலும் அதைவிட குறைந்த வயதுடைய குழந்தை பயன்படுத்தும் திறன்களைப் போல் உள்ளன.

இந்த அறிய உதவும் பிரிவு நடவடிக்கைகளைப் பொருத்த வரையில், உங்கள் குழந்தை பயன்படுத்தும் திறன்களில் ஒரு சில அதைவிட குறைந்த வயதுடைய குழந்தை பயன்படுத்தும் திறன்களைப் போல் உள்ளது, ஆனால் வயதிற்குரிய எதிர்பார்க்கப்படும் திறன்களைப் பெரும்பாலும் பயன்படுத்துகிறது.

### ஆம்

இந்த பிரிவில் குழந்தையின் திறமை குறித்து வேறு யாருக்கேனும் கவலை உள்ளதா?

**ஆம்**

இந்த அறிய உதவும் பிரிவு தொடர்பான அன்றாட பழக்கங்கள் மற்றும் நடவடிக்கைகளில், உங்கள் குழந்தை பயன்படுத்தும் திறன்கள் பெரும்பாலும் அவர்களுடைய வயதை ஒத்த குழந்தைகளின் வயதுக்கேற்ற திறன்களாகவே உள்ளன இருப்பினும் சில கவலைகள் உள்ளன.

**இல்லை**

இந்த அறிய உதவும் பிரிவு நடவடிக்கைகளைப் பொருத்த வரையில், உங்கள் குழந்தை பயன்படுத்தும் திறன்கள் பெரும்பாலும் வயதுக்கேற்ற திறன்களாகவே உள்ளன.